RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1978

# புறநானூற்று பெண்பாற் புலவர்களின் அற உணர்வுகள்

க. வெண்ணிலா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, சேலம்-636008, தமிழ்நாடு, இந்தியா

# Moral Principles of Women Poets in Purananuru

K. Vennila [a, *]

[a] Department of Tamil, Government Arts College for Women, Salem-636008, Tamil Nadu, India

* Corresponding Author: vennila.kk1993@gmail.com

Received: 15-09-2022
Revised: 03-11-2022
Accepted: 26-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Purananuru is a book that can be regarded as the historical treasury of Tamil literature. The culture, tradition, knowledge and commerce of the Tamils have been gathered together and become a literary ark. Women also excelled in the Sangam period because it was a time of emphasis on women's education. Women poets of the Sangam era have gained equal rights to men as a writer and have expressed their personality and ideas in a dignified way. These women did not hesitate to teach virtues to people through communal ideas. The purpose of this article is to bring out the moral principles of female poets in Purananuru from a social point of view. The personality of women poets in Purananuru, their hospitality, their modesty, their tendency to tell about the shortcomings of kings without hesitation, their courage, participating in the development of the country, and the heroic spirit of women poets are recorded in this article.

**Keywords:** Purananuru, Book, Women's Education, Moral Principles

## முன்னுரை

உயர்தனிச் செம்மொழிஇலக்கியங்களில் சங்க இலக்கியமும் ஒன்றாகும். பாட்டும், தொகையும் சேர்ந்த நூலாக எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் அமைந்துள்ளது. சங்க பாடல்கள் 2381 ஆகும். அதில் அகம் சார்ந்த பாடல்கள் 1862 என்பர். சங்க இலக்கியப் பாடல்கள் அனைத்தும் மக்களின் சூழ்நிலை, வாழ்க்கைமுறை, பழக்கவழக்கங்களின் பிரதிபலிப்பாக உள்ளன. சங்கப் பாடல்களை பாடிய புலவர்கள் 473 பேர் ஆவார். அவர்களில் 40க்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் கவிப்பாடும் ஆற்றல் பெற்று ஆணுக்கு பெண் சமமானவர்கள் என்பதை எண்ணறிவில் மெய்பித்துள்ளனர்.

சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் கல்வியில் சிறந்து விளங்கினர். அரச குல பெண்டிர், பொது பெண்டிர் என அனைவரும் அறிவில் சிறந்து விளங்கி தம் கருத்துக்களை பாடல்களாக வடித்து மக்களுக்கு நல்லறிவினை போதித்து சமூகம் மேம்பாடு அடைய உறுதுணைப் புரிந்துள்ளனர் என்றால் அது மிகையாகாது. புறநானூற்று பெண்பாற் புலவர்களின் கவியாளுமையும், அவர்களின் பாடல்களில் பொதிந்துள்ள அறஉணர்வுகளையும் புலப்படுத்துவதாக அமைந்துள்ளன.

## அறம் சொற்பொருள் விளக்கம்

பிறருக்கு தீமை செய்யாது, யாருடைய பொருளுக்கும் ஆசைப்படாது, மனத்தூய்மையுடன் வாழ்வதே சிறந்த அறமாகும். தன்னைப்போலவே பிறரையும் பாவிக்கும் குணம் இருந்தாலே

அறமானது வாழ்வாங்கு வாழ்ந்து சிறப்பு அடையும். இத்தன்மை ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருந்தாலே தீய எண்ணங்கள் தோன்றாது. தீய எண்ணங்கள் தோன்றாததால் இச்சமூகமானது வளர்ச்சிப்பாதையில் செல்லும். ஒற்றுமை உணர்வு மேலோங்கும் என்பதில் ஐயமில்லை. அறம் என்ற சொல்லிற்கு பல்வேறு சான்றோர்களும், அறிஞர்களும் பலவிதமான விளக்கத்தினைத் தந்துள்ளனர்.

அறம் என்ற சொல்லிற்கு பேரகர முதலி,

“நல்வினை, ஐயம், ஏழைகட்கு, இலவசமாகக் கொடுப்பது. நோயாளிகட்கு இலவசமாக மருந்தீகை, நலமானது, இன்பம், கற்பு, நோன்பு, அறப்பயன் (புண்ணியம்), சமயம், ஓதி (ஞானம்), அறச்சாலை, அறத்தெய்வம், நடுநிலையறம்” (Muthulakumi, 1999). என்று பதினைந்து வகையான பொருளை இவ்வகராதி எடுத்தியம்புகிறது என்று வே. முத்துலக்குமி தம் நூலில் கூறியுள்ளார். இவைபோலவே அறம் எனும் சொல்லிற்கு கடமை, தருமம், கற்பு, அறச்சாலை, யமன், ஞானம், அறக்கடவுள், புண்ணியம், தருமதேவதை, அறநூல் மற்றும் இவைஇன்றி இன்னும் பல பொருளை அறிஞர் பெருமக்கள் வழங்கியுள்ளனர் என்பதை நோக்கும்போது அறம் எனும் சொல் எவ்வளவு கருத்தாழம் மிக்க சொல்லாகவும், மக்களின் வாழ்வோடு கலந்து இருப்பதைத் தெளிவாக அறிய முடிகிறது. பேரகர முதலிப்போலவே சைவசித்தாந்த அகராதி. தமிழ்ப் பெயரகராதி, செந்தமிழ் அகராதி, மதுரைத்தமிழ் பேரகராதி, கழக அகராதி அறம் எனும் சொல்லிற்கு பல்வேறு பொருளினை வழங்கியுள்ளது.

“அறம் என்பது ஏதோ ஒரு நீதியை உணர்த்தும் பொருட்டுப் பயன்படுத்தப் பெற்ற சொல் என்பதைவிட அச்சொல் பழந்தமிழர் பண்பையும் உயர்ந்த நெறியையும், வாழ்வியல் தத்துவத்தையும் உணர்த்திப் படிப்படியாக அச்சொல் இவ்வுலகத்திற்கு நல்வழிகாட்டி, உலக மக்களால் பெரிதும் போற்றப்படும் இறையாற்றலையே உணர்த்த வல்ல ‘செஞ்சொல்’ (Ramalingam, 2003). என்று என்.இ. இராமலிங்கம் அறம் என்ற சொல் தீதறிய செம்மையான மனித குலத்தை வாழவைக்க வந்த உயர்ந்த செஞ்சொல் என அறத்திற்கு விளக்கம் அளித்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

## சங்கால பெண்பாற் புலவர்கள்

சங்க காலத்தில் பெண்கள் தெய்வமாகவும், மரியாதைக்குரியவர்களாகவும் நடத்தினர். தாய், அன்னை, முத்தோள், மங்கல மகளிர், மனையோள், வெய்யோள், மனைக்கு விளக்கு மகளிர் எனப் புறப்பாவில் பலவாறாகச் சிறப்பித்துப் பேசப்படுகிறது. ‘மனைக்குப்பாழ் வாள்நுதல் மடவாள்’ என்ற வரிகள் மூலம் மகளிரின் சிறப்பினை அறிந்துக் கொள்ள முடிகிறது.

ஒருநாட்டில் பெண் விடுதலை பெற்று முற்போக்கு சிந்தனை உடையவளாக இருந்தால் மட்டுமே அச்சமுதாயமானது சிறப்புநிலை அடையும். எந்த நாட்டில் ஒரு பெண் முடக்கப்படுகிறாளோ அந்தநாடு அடியோடு அழிந்துவிடும் என்பதில் ஐயமில்லை. பெண்ணாக பிறப்பதே தவம் என்பதை,

“மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டு மம்மா”

என்று கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பாடியுள்ளார் (Desika Vinayaga Pillai, 1988). பெண் பிறப்பு எடுப்பதென்றாலே அவள் மாபெரும் தவங்களைச் செய்ய வேண்டும் என்றும் அவர்களின் மூலமே அறங்கள் வளரும் என்று அழகாகக் கூறியுள்ளார்.

சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் பலர் வாழ்ந்து சிறந்த கவிதைகளை இயற்றிருப்பது அக்காலக் கல்வியின் முதிர்ச்சியினையும், பெண்ணின் பெருமையையும் அவர்களுக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தையும் காட்டுகிறது. இதனால் தான் சங்க காலத்தைப் ‘பொற்காலம்’ என அழைத்தனர். சங்க இலக்கியங்களை அகம், புறம் என்று இரு பிரிவாக பிரித்து தலைவன் தலைவியின் காதல், கற்பு வாழ்வினை அகப்பாடல்களிலும், போர் குறித்த செய்திகளைப் புறப்பாடல்களின் மூலம் புலவர் பெருமக்கள் தம் கருத்தினை வெளிப்படுத்தியுள்ளனர்.

சங்ககால பெண்பாற் புலவர்களாக ஔவையார், அஞ்சில் அஞ்சியர், அஞ்சியத்தை மகள், நாகையார், அள்ளூர் நன்முல்லையார், ஆதிமந்தியார், ஊண்பித்தை, காக்கைப்பாடினியார், பாரி மகளிர், வெள்ளிவீதியார், வெண்மணிப்பூதி, வெண்ணிக்குயத்தியார், போந்தை பசலையார், பொன்முடியார் போன்ற 40க்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் கவிப்பாடல் பாடியுள்ளதாகவும், மேலும் தமிழாய்வாளர்களிடையே பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையில் பல்வேறு குழப்பங்கள் தோன்றியுள்ளதையும் ஆய்வு நூல்களின் மூலம் அறியமுடிகிறது. இக்குழப்பங்கள் நிறைந்த போதிலும் அக்காலக்கட்டத்திலே பெண்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கவிப்பாடிய சங்க பெண்களின் புலமைத்திறத்தை உலகறியச் செய்கிறது எனலாம். சங்க பெண்பாற் புலவர்களின் பாடல்களில் சமூக அறம், விருந்தோம்பல் அறம், பிறருக்கு ஈயும் ஈகையறம், கடமையறம், போர் அறம், இல்லற அறம் ஆகியவை அதிகளவில் வெளிப்படுகின்றதைக் காணலாம்.

## புறநானூற்று பெண்பாற் புலவர்கள்

சங்க இலக்கியத்தில் புறம் மட்டும் பாடிய பெண்பாற் புலவர்கள் எட்டுப்பேர் ஆவார். இவர்கள் ஒன்பது புறப்பாடல்களைப் பாடியுள்ளனர். இப்பாடல்கள் அனைத்தும் புறநானூற்றில் மட்டுமே உள்ளது. இப்பெண்பாற் புலவர்களாகிய பேய்மகள் இளவெயினி, வெண்ணிகுயத்தியார், காவற்பெண்டு, பாரிமகளிர், குறமகள் இளவெயினி, பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு, தாயங்கண்ணியார், மாற்பித்தியார் போன்றோர் ஆவார். பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு அரச குலத்தையும், பாரிமகளிர் குறுநில மன்னர் குலத்தையும், குறமகள் இளவெயினி குறக்குலத்தையும், வெண்ணிக்குயத்தியார் குயவர் குலத்தையும் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். இப்புலவர்களின் நிலைகளை காணும் போது புலவர்கள் அனைவரும் ஓரிடத்தையும், ஓரினத்தையும் சார்ந்திடாது புலமை என்னும் கல்வியுடைமை மட்டுமே இவர்களை இணைத்துள்ள திறத்தை அறிய முடிகிறது.

## கடமை உணர்வு

ஒரு வீட்டில் வாழும் தாய், தந்தை, மகன், படைக்கலம், கொல்லன், நாட்டைக் காக்கும் அரசன் என்று ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் செய்தாலே அறமானது நிலைத்து வாழும் என்று பொன்முடியார் ஒரு பாடலில் கூறியுள்ளார். அவை,

“ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே

சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே

வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே”

என்ற பாடலில் தாயின் கடமை குழந்தையைப் பெற்று எடுத்து கொடுப்பது, தந்தையின் கடமை பிள்ளைகளைச் சான்றோனாக உருவாக்குதல், மன்னனின் கடமை மக்களைக் காத்தல், கொல்லினின் கடமை வேல் வடித்து கொடுத்தல் என்று ஒவ்வொருவரின் கடமை இன்னது என விளக்கியுள்ளார். தனிமனிதன் தன் கடமையைச் சரிவர செய்தால் மட்டுமே ஒரு வீடும் அந்த நாடும், நாட்டு மக்களும் வளமாக வாழ முடியும் என்ற அறக்கருத்தை தன் பாடலின் மூலம் பொன்முடியார் என்ற பெண்பாற்புலவர் அழகாக வெளிப்படுத்தியுள்ளார் (Balasubramaniyan, 2004).

மன்னனின் கடமை அந்நாட்டு மக்களைக் காப்பதே ஆகும். மக்கள் எந்தவிதமான இன்னலுக்கும் ஆட்படாமல், நல்வாழ்வு வாழ வைப்பது மன்னனின் தலையாயக் கடமைகளில் ஒன்றாகும். ஒவ்வொருவரின் தேவையை அறிந்து அவர்களின் வறுமை நிலையைப் போக்க மன்னன் பாடுபட வேண்டும் என்று பெண்பாற் புலவர்கள் மன்னனின் கடமையை எடுத்துக் கூறினர். நல்லவையை எடுத்துக் கூறி நல்வழியில் செல்லவும், அவர்கள் கடமையை தவறும்போது அவர்களை இடித்துரைக்கவும் தயங்கவில்லை.

சங்ககால கட்டத்தில் அறப்போர் அதிகளவில் நடைபெற்றது. இருநாட்டினர் சண்டைப் புரிந்தாலும் அதிலும் அறமானது காக்கப்பட வேண்டும் என்ற உயரிய கொள்கைக் கொண்டு வாழ்ந்து வந்தனர் பழந்தமிழர்கள். தன் நாட்டை காக்க ஆண் மட்டும் வீரஉணர்வு கொண்டவர்களாக விளக்கவில்லை. பெண்களும் வீரஉணர்வு கொண்டு தாய்நாட்டை காக்க பாடுபட்டுள்ளனர்.

ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற் புலவர்,

"ஒருமகன் அல்லது இல்லோள்

செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே"

என்ற பாடலில் ஒரு வீரத்தாயின் நாட்டுப்பற்று அறத்தோடு வெளிப்படுவதை உணர முடிகிறது (Balasubramaniyan, 2004). போர் நடைபெறும் காலக்கட்டத்தில் முதல்நாள் பல படைகளை வீழ்த்திவிட்டு தன் சகோதரனை இழக்கிறாள். அடுத்தநாள் போரிலே தன் கணவனை இழக்கிறாள். தன்னுடைய கணவன் இறந்த துக்கத்தினை மனதில் புதைத்து உயிருக்கும் மேலான பால்மனம் மாறாத பாலகனை எண்ணெய் தடவி வாரி முடித்து வேலை கையில் கொடுத்துப் போர்க்களம் சென்று வா! என்று கூறி மகன் செல்லும் திசையைப் பார்த்து பெருமித உணர்வுடன் ஒரு வீரத்தாய் நிற்பதைப் பாடியுள்ளார்.

இக்காலக்கட்டத்தில் ஒரே புதல்வனை இராணுவ போருக்கு அனுப்பவே தயங்கும் சில தாய்மார்கள் இருக்கும் நிலையில் தன்னுடைய பால்குடி மறவாத குழந்தையை போருக்கு அனுப்பும் வீரத்தாயின் உணர்வு அறத்திற்கே வலுச்சேர்க்கின்றது எனலாம். இதில் ஒரு வீரத்தாயின் கடமை அறம் புலப்படுகிறது.

## விருந்தோம்பல் பண்பு

தமிழர்களுக்குரிய தலைச்சிறந்த பண்புகளில் ஒன்று விருந்தோம்பல் பண்பாகும். பசித்தவருக்கு உணவளித்தலே அறங்களில் மேலான அறமாகும். வள்ளுவர் விருந்தோம்பலுக்கு தனி அதிகாரத்தையே படைத்துள்ளார். தமிழ் மக்கள் இல்வாழ்வின் கடமைகளுள் 'விருந்தோம்பலுக்கே' முதன்மை இடம் அளித்தனர் என்பதை,

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செயதற் பொருட்டு"

என்று விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் கூறியுள்ளார். மேலும் தொல்காப்பியர்,

"விருந்து புறந்தருதலும் சுற்ற ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்"

என்ற பாடலில் மக்களின் தலையாயப் பண்புகளில் விருந்தினரை உபசரித்தலும் ஒன்று என விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார் (Ilampurnaar, 2016). சிலப்பதிகாரத்தில் 'அறவோர்க்கு அளித்தல்' என்று விருந்தோம்பலின் பண்பை கூறியதைப் போலவே சங்க ஔவையாரும் விருந்து அளித்தலின் மேன்மையை பல பாடல்களில் விளக்கியுள்ளார்.

அதியமானின் விருந்தோம்பல் பண்பை தொண்டைமானிடம் ஔவையார் எடுத்துக் கூறுவதாக அமைந்து பாடலில்,

"உண்டாயின் பதங்கொடுத்து

இல்லாயின் உடனுன்னும்

இல்லோர் ஒக்கல் தலைவன்"

என்ற பாடலில் அதியமான் தன்னிடம் உணவு அதிகமாக இருந்தால் கொடுப்பான். தன்னிடம் உணவு பொருள் சிறிதளவாக இருந்தால் அதனை பங்கிட்டு கொடுத்து உண்ணும் இயல்புடையவன் என்று அதியமானின் விருந்தோம்பல் பண்பை புலப்படுத்தியுள்ளார் (Balasubramaniyan, 2004).

## கொடையறம்

தன்னிடம் வந்து யாசித்தவர்களுக்கு இல்லையெனக் கூறாது, வழங்குவதே கொடையாகும். இவ்வறம் ஒரு மனிதனுக்குள்ளும் இருக்க வேண்டும். ஔவையார் அதியமானின் கொடைத்திறனை கூறும்போது, "ஒருநாள் செல்லலும் இருநாள் செல்லலும்" என்ற பாடலில் ஒருநாள் சென்றாலும் பலநாள் சென்றாலும் முதல்நாள் போலவே தன்னை நாடிவருவோருக்கு கொடை அளிப்பான் என்று கொடையறத்தை விளக்கியுள்ளார் (Balasubramaniyan, 2004).

தான் கொடை பெற்றதோடு நின்றுவிடாமல் ஔவையார், விறலியரையும் அதியமானிடம் வழிப்படுத்தியதை,

"சில்வளை விறலி

செல்வை ஆயின், சேணோன் அல்லன்"

என்று தன்னலம் கருதாது பொதுநலச் சிந்தனை இருக்க வேண்டும் என்று இவ்வுலகிற்கு ஔவையார் உணர்த்தியுள்ளார் (Balasubramaniyan, 2004).

ஔவையின் கொடையறத்தை புகழ்ந்து கூறும் ஜெ. சண்முகம் "கொடையைப் பற்றிய கருத்துகளில் ஔவையார் கபிலருக்கு இணையாகிறார்" ஆண் கவிகளுக்கு இணையாக பெண்கவிகளும் அறத்தை உணர்த்தியுள்ளார் என்பதை அறிய முடிகிறது (Chellam, 2015).

## சமூக அக்கறை

மக்களும், அரசர்களும் நன்முறையில் வாழவும், அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்று ஔவையார் பலபாடல்களைப் பாடியுள்ளார். ஆண்கள் நல்ல முறையில் இருந்தால்தான் இச்சமுதாயம் முன்னேற்றப் பாதையை அடைய முடியும் என்பதை,

"எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்று பாடியதன் மூலம் எங்கு ஆடவர்கள் நல்லவராக உள்ளனரோ அந்த நிலமும் நன்றாக இருக்கும் என்றும், உலகமும் நல்லதாக இருக்கும். அவர்கள் கெட்டவரானால் இந்த உலகமும் கெட்டு ஒழியும் அதனால் ஆடவர்கள் நல்லவராக இருக்க வேண்டும் என்று ஔவையார் கூறியுள்ளார் (Balasubramaniyan, 2004). இக்கருத்தின் மூலம் சமூக அக்கறை நிறைந்த பெண்மணியாக சங்க காலத்தில் ஔவையார் வாழ்ந்துள்ளார் என்பது புலனாகிறது.

## இடித்துரைக்கும் பண்பு

ஒரு மனிதன் தவறு செய்யும்போது பிறர் அதனை சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்துதல் இடித்துரைத்தல் ஆகும். இதனை, 'அறவுரை பகர்தல்' என்றும் கூறலாம். ஒரு மன்னனின் தவறைச் சுட்டிக் காட்டும்போது ஒரு வளமான நாடு உருவாகிறது. இதனை நன்குணர்ந்த ஔவையார் போரினைத் தடுத்து நிறுத்த பகை நாட்டு மன்னனிடம் தூதாகச் சென்று அதியமானின் படை வலிமையை எடுத்துக்கூறி நம்முடைய நாடு வளமாக இருப்பதைவிட பகைவரின் நாடும் வளமாக இருக்க வேண்டும் என்றெண்ணி பாடிய பாடல்,

"களம்புகல் ஓம்புமின், தெவ்வீர் போர் எதிர்ந்து

எம்முளும் உளன் ஒரு பொருநன்"

என்ற பாடலில் ஔவையின் சமூகச் சிந்தனையும் தவறெனில்அதனை இடித்துரைக்கும் பாங்கும் புலப்படுவதை அறிய முடிகிறது. ஔவையைப் போலவே இளவெயினி எனும் பெண்பாற் புலவரும்

மன்னின் குறைகளை எடுத்துக்கூறும் தைரிய மங்கையாகத் திகழ்ந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது (Balasubramaniyan, 2004).

பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு தன் கணவன் இறந்த பின்பு பிரிந்து வாழ முடியாத அன்பின் மிகுதியால் உடன்கட்டை ஏறினாள். இதில் இவரின் இல்லறத்தை உணர முடிகிறது. அக்கால கட்டத்தில் இல்லறம் பேணுதல் தலைவியின் தலையாயக் கடமையாக இருந்ததை இப்பெண்பாற் புலவரின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் புறநானூறு பாடிய பெண்பாற் புலவர்கள் தங்களின் உள்ளக்கருத்தை எவருக்கும் அஞ்சாது வெளிப்படுத்திய பாங்கினையும் அறிய முடிகிறது.

## முடிவுரை

சங்ககாலத்தில் பெண்பாற் புலவர்கள் கல்வி அறிவு பெற்று திகழ்ந்ததையும் அவர்களின் கல்வியறிவு தன்னுடனே அழிந்து போகவிடாது அனைவருக்கும் பயன்தர வேண்டும் என்ற பொதுநலமுடையவராக வாழ்ந்துள்ளதை அறிய முடிகிறது. விருந்தோம்பலின் மாண்பு, ஒவ்வொரு மனிதனின் கடமை உணர்வு, இடித்துரைக்கும் பாங்கு, அறிவுரை கூறி அறத்தை வலியுறுத்தும் போக்கு, கொடையின் மகத்துவம் போன்றவற்றின் மூலம் அறக்கருத்துக்களை வெளிப்படுத்தி சமுதாயம் முன்னேற்ற பாதையில் செல்ல உறுதுணைப் புரிகின்றது எனலாம். இக்காலக்கட்டத்தில் பெண் விடுதலை பெற்று கல்வியறிவுடன் திகழ்வதைப் போல சங்க கால பெண்பாற் புலவர்களும் கல்வி அறிவு பெற்று வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவடைகின்றது. இவர்களை போலவே ஒவ்வொரு பெண்களும் அறஉணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்பதை உணர முடிகிறது.

## References

Balasubramaniyan, K.V. (2004) Purananuru, Paari Nilaiyam, Chennai, India.

Chellam, T. (2015) Aaivuthogai, Kavya Pathippagam, Chennai, India.

Desika Vinayaga Pillai, (1988) Kavimani Malarum Malaiyum, Paari Nilaiyam, Trichy, India.

Ilampurnaar, (2016) Tholkappiyam, Saradha Pathippagam, Chennai, India.

Muthulakumi, V. (1999) Pandiath Tamil Ilakkiyangalil Aranerikal, Anitha Pathippagam, Chennai, India.

Ramalingam, N.E. (2003) Araththin Aachim Adhampakkam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License